DEPOSITION OF WITNESS

---

IN THE COURT OF SUBORDINATE JUDGE, DEVAKOTTAI.

| | | |
|---|---|---|
| Original Suit Case No. | : | |
| H.M.O.P. “ | : | |
| M.C.O.P. “ | : | 18/2017 |
| S.O.P. “ | : | |
| W.O.P. “ | : | |
| S.C. “ | : | |
| Deposition of Witness for | : | P.W.1 |
| | : | D.W. |
| | : | R.W. |
| | : | Court. |
| Name | : | காளிராஜ் |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affairmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 10.03.2020.

**முதல் விசாரணை:**

நான் சாட்சியாக ஆஜராகி நிருபண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளதை என் தரப்பு முதல் விசாரனை சாட்சியமாக ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன். அதில் உள்ள விபரங்கள் என்னால் சொல்லப்பட்டவைதான். அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். என் தரப்பில் முதல் தகவல் அறிக்கை மசாஆ.1, குற்ற அறிக்கை மசாஆ.2, காயச்சான்று மசாஆ.3, மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை மசாஆ.4, மனுதாரின் குடும்ப அட்டை மசாஆ.5, மனுதாரின் ஓட்டுனர் உரிமம் மசாஆ.6, மருந்து பில்கள் மசாஆ.7, முதல் சிகிச்சை பெற்றதற்கான மருந்து பில்கள் மசாஆ.8, சிடி ஸ்கேன் அறிக்கை மசாஆ.9, சிடி ஸ்கேன் (வரிசை-11) மசாஆ.10, எக்ஸ்ரே (வரிசை-10) மசாஆ.11 மனுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**குறுக்கு விசாரணை:** (3ம்எதிர்மனுதார் தரப்பு)

விபத்து 25.03.2016 தேதி நடந்தது. விபத்து நடந்தது அகலமான சாலை. தேசிய நெடுஞ்சாலை மதுரை - சென்னை சாலை. விபத்தின் போது நான் டாடா ஏசி வாகனத்தில் பயணம் செய்தேன். வாகனத்தின் எண். டிஎண்.57-ஜே-5122 ஆகும். டாடா ஏசி வாகனத்தில் நானும் ஓட்டுனரும் மட்டும் பயணம் செய்தோம். விபத்தை ஏற்படுத்திய வாகனத்தின் எண். டிஎண்.58-ஏசி-7162 லாரி ஆகும். மேற்படி வாகனம் திடீரென எந்தவித எச்சரிக்கையும் இல்லாமல் பிரேக் அடித்ததால் மேற்படி விபத்து நடந்தது. நான் பயணம் வாகனம் மேற்படி லாரியின் பின்னால் மோதி விபத்து ஏற்பட்டது. விபத்தின் போது நான் முறையாக சீட் பெல்ட் அணிந்திருந்தால் விபத்தை தவிர்திருக்கலாம் என்றால் நான் சீட் பெல்ட் போட்டிருந்தேன். நான் பயணம் செய்த டாடா ஏசி வாகனம் மிதமான வேகத்தில் சென்றிருந்தால் விபத்தை தவிர்த்திருக்கலாம் என்றால் சரியல்ல. நான் பழம் வியாபாரம் செய்து வருகிறேன். அதற்கான அடையான அட்டை தாக்கல் செய்யவில்லை. விபத்தின் போது வலது காலில் முழங்காலுக்கு கீழே பிளேட் பொருத்தப்பட்டுள்ளது. இடது முட்டிக்காலில் அறுவை சிகிச்சை செய்யப்பட்டுள்ளது. இடுப்பு குறுக்கு எலும்பு ஜவ்வு விலயதால் அதற்கு அறுவை சிகிச்சை செய்யப்பட்டுள்ளது. எனக்கு ஏற்பட்ட காயங்கள் ஓரளவுக்கு குணமாகிவிட்டதா என்றால் சரியல்ல. எனக்கு இன்னும் குணமாகவில்லை. நான் தாக்கல் செய்துள்ள மருத்துவ பில்கள் எல்லாம் வழக்கிற்காக பின்னிட்டு தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. எனக்கு எற்பட்ட காயங்கள் சிறிய காயங்கள் என்றும் வழக்கிற்காக மிகைப்படுத்தி சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள மருத்துவ பில்களை தகுந்த மருத்துவரால் மட்டும் தான் குறியீடு செய்ய முடியும் என்றால் சரியல்ல. எனக்கு ஏற்பட்ட காயங்கள் சரியாகிவிட்டது என்றால் சரியல்ல. நான் கேட்டுள்ள இழப்பீடு மிகைப்படுத்தி கேட்டுள்ளேன் என்றால் சரியல்ல. நான் சென்ற வாகனத்தின் ஓட்டுனர் ஜெகன் என்பவரின் கவனக்குறைவால் தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. அதனால் எதிர்மனுதாரை பொறுத்த வரையில் இந்த வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை: இல்லை.